ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1689/20 - 2011 ජනවාරි 21 වැනි සිකුරාදා - 2011.01.21

*1689/20 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு சனவரி மாதம் 21 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### மதுவரிக் கட்டளைச் சட்டம்

மதுவரி அறிவித்தல் இல. 935

நிதி, திட்டமிடல் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 52) 25 ஆம் பிரிவினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், ஹோட்டல்களின் சர்வதேச தராதரங்களையும் இணக்கப்பாடுகளையும் பேணும் வகையில் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் தொடர்ந்தேர்ச்சியான கண்காணிப்பின் கீழ் வரும், சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையினால் அங்கீகரிக்கப்பட்ட ஹோட்டல்களுக்கு வைன், பியர் மற்றும் மதுபானத்தினைக் கொண்ட திரவங்கள் அனைத்தினையும் பரிமாறுவதற்கான விசேட அங்கீகாரம் மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 7 (அ) ஆம் பிரிவினால் வழங்கப்படும் அதிகாரத்தின் கீழ் மதுவரி ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்படுதல் வேண்டுமென இந்த அறிவித்தல் மூலம் வெளிப்படுத்துகின்றேன்.

1. பின்வரும் விடயங்களை உறுதிப்படுத்தி சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகத்தினால் சான்றிதழொன்று வழங்கப்படுதல் வேண்டும் :-

I. மாநகர பிரதேச எல்லைக்குள் தாபிக்கப்பட்டுள்ள ஹோட்டல்கள் தொடர்பில் முதலீடானது 4 மில்லியன் ஐ. அ. டொலர்களை குறையாது அல்லது அதற்குச் சமமான இலங்கை ரூபாவாக இருப்பதுடன் மாநகர எல்லைக்கு வெளியே தாபிக்கப்பட்டுள்ள ஹோட்டல்கள் தொடர்பில் 2 மில்லியன் ஐ. அமெரிக்க டொலர்களை விட குறையாது அல்லது அதற்குச் சமமான இலங்கை ரூபாவாக இருத்தல் ;

II. மூன்று நட்சத்திர அல்லது அதற்கு மேற்பட்ட வகுப்பு ஹோட்டல்கள், விற்பனை கூட ஹோட்டல், விற்பனைக் கூடவில்லா அல்லது மரபுரிமை ஹோட்டல் என்ற வகையில் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையினால் வகுப்பாக்கம் செய்யப்பட்டிருத்தல் ;

III. விற்பனைக்கூட ஹோட்டல்கள், விற்பனைக்கூட வில்லங்கள், மரபுரிமை ஹோட்டல்கள் மற்றும் ஒரே தராதரத்தின் கீழ் தாபிக்கப்பட்ட ஹோட்டல்கள் தொடர்பில் மாநகர எல்லைக்குள் 15 அல்லது அதற்கு அதிகமானதும் வெளிப்பிரதேசங்களில் 07 அல்லது அதற்கு அதிகமான அறைகளைக் கொண்டிருத்தல்.

அத்துடன்

2. I. இந்த அறிவித்தலின் பகுதி II இல் விளக்கப்பட்டவாறு அங்கீகாரமளித்தல் கட்டணமாகக் குறிப்பீடு செய்யப்பட்ட கொடுப்பனவின் பேரில்,

II. மூன்று பஞ்சாங்க வருட காலப்பகுதியொன்றுக்கு செல்லுபடியாகும்.

III. இந்த அறிவித்தலின் பகுதி I இல் குறித்துரைக்கப்பட்டவாறு நியதிகள் மற்றும் வரையறைகளுக்குட்பட்டு,

IV. இந்த அறிவித்தலின் மற்றும் வரையறைகளுக்குட்பட்டு, பகுதி III இல் குறித்துரைக்கப்பட்டவாறு அங்கீகாரப் படிவத்தில் வழங்கப்படுதல் வேண்டும்.

மேலும், 2010.09.28 ஆந் திகதிய 1673/8 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட 920 ஆம் இலக்க மதுவரி அறிவித்தலை இத்தால் இரத்துச் செய்கிறேன்.

மஹிந்த ராஜபக்ஷ,
நிதி, திட்டமிடல் அமைச்சர்.

நிதி, திட்டமிடல் அமைச்சு,
கொழும்பு 1,
2011, சனவரி 20.

## பகுதி I

### விதிகள்

1. இந்த விதிகள், மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 52) 18 ஆம் பிரிவின் கீழ் ஏற்றுக்கொள்ளப்பட்ட தராதரங்களுக்கு அமைவாக தயாரிக்கப்பட்டுள்ள வைன், பியர் மற்றும் மதுபானத்தைக் கொண்டுள்ள அனைத்து திரவங்களையும் பரிமாறுவதற்கு ஏற்புடையதாகும்.

2. ஹோட்டல் என்பது - மாநகர பிரதேசங்களில் 4 மில்லியன் ஐ. அ. டொலர்களைவிட அதிகமாகவும் ஏனைய பிரதேசங்களில் 2 மில்லியன் ஐ. அ. டொலர்களைவிட அதிகமாகவும் முதலீடு செய்யப்பட்டுள்ளதுடன் மூன்று நட்சத்திர அல்லது அதற்கு மேற்பட்ட வகுப்பு ஹோட்டல், விற்பனைக்கூட ஹோட்டல், விற்பனைக்கூட வில்லா அல்லது மரபுரிமை ஹோட்டல் என்ற வகையில் வகுப்பாக்கம் செய்யப்பட்டுள்ள இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையினால் அங்கீகரிக்கப்பட்ட அனைத்து தங்குமிட வசதிகளும் எனப்பொருள்படும்.

3. I. அனைத்து மதுசார குடிபானங்களும் அங்கீகரிக்கப்பட்ட விற்பனை முகவரிடமிருந்து கொள்வனவு செய்யப்படுதல் வேண்டும். கொள்வனவு செய்யப்பட்ட மற்றும் வழங்கப்பட்ட மதுபானம் தொடர்பான கணக்கொன்றினை ஹோட்டல் பேணிவருதல் வேண்டும் ;

II. மதுபான குடிவகைகளை ஹோட்டல் வளவுக்குள் பரிமாறுவதற்கு அங்கீகாரம் வழங்கப்படும் ஹோட்டலின் உரிமையினை மாற்றுதல் அல்லது பங்குடமையினை மாற்றீடு செய்தல் என்பன இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் மதுவரி ஆணையாளர் நாயகத்தின் அனுமதியின்றி மேற்கொள்ளப்பட முடியாது. இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் மதுவரி ஆணையாளர் நாயகத்தின் அங்கீகாரம் பெறப்பட்டாலேயே அத்தகைய மாற்றல்கள் பயன்வலுப்பெறும். அத்தகைய மாற்றலொன்றுக்கான செலவினம் ரூபா ஒரு மில்லியனாகும் ;

III. அங்கீகாரமானது வளாகத்திற்குள் நுகரப்படும் மதுபான குடிவகைகளுக்கு செல்லுபடியாகும் ;

IV. அங்கீகாரம் தொடர்ந்தேர்ச்சியான மூன்று நிதியாண்டு காலப்பகுதியொன்றுக்கு வழங்கப்படும். ஒரு நிதியாண்டில் வழங்கப்படும் புதிய அங்கீகாரம் தொடர்பில் அத்தகைய அங்கீகாரம் அந்த வருடத்தின் எஞ்சிய காலப்பகுதிக்கு வழங்கப்படுவதுடன் மேலும் இரண்டு தொடர்ந்தேர்ச்சியான வருடங்களுக்கும் வழங்கப்படும். மூன்று பஞ்சாங்க ஆண்டுகளின் பின்னர் அங்கீகாரம் புதுப்பிக்கப்பட வேண்டுமாயின் அத்தகைய அங்கீகாரம் முடிவடைவதற்கு ஆகக்குறைந்தது 45 நாள்களுக்கு முன்னர் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் சிபாரிசுடன் மதுவரி ஆணையாளர் நாயகத்திற்கு வேண்டுகோள் ஒன்று அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும் ;

V. மதுபான பரிமாறல்கள் அனைத்து முழு நோன்மதி தினங்களிலும் இடம்பெறுதல் கூடாது ;

VI. மதுவரி அறிவித்தல் இல. 902 இல் குறிப்பிட்டதையொத்த (FL 7) உரிமப்பத்திரத்தில் அங்கீகாரம் காணப்படுதல் வேண்டும். பகுதி II இல் குறிப்பீடு செய்யப்பட்டதற்குப் புறம்பாக ஹோட்டல் வளாகத்திற்குள் மதுபானம் பரிமாறுவதற்காக எவ்வித மேலதிகக் கட்டணமும் அறவிடப்படமாட்டாது.

VII. சமயலறை, மலசலகூடங்கள், இணைப்புக்கள் மற்றும் சுற்றுப்புறச் சூழல் என்பன உயர்ந்த மட்டத்தில் பேணப்படுதல் வேண்டும் ;

VIII. குறித்த ஹோட்டலானது இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையினால் குறித்துரைக்கப்பட்ட தராதரத்தினை பேணியுள்ளது என்பதை உறுதிப்படுத்தும் சான்றிதழொன்று சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையினால் ஒவ்வொரு வருடத்தின் இறுதியிலும் மதுவரி ஆணையாளர் நாயகத்திற்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும் ;

IX. ஏதேனும் நிபந்தனைகள் மீறப்பட்டதினால் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையினால் அங்கீகாரம் இரத்துச் செய்யப்படுதல் மதுபான குடிவகைக்கான அங்கீகாரமும் தாமதமாவே இரத்தாகுவதாகக் கொள்ளப்படும் ;

X. இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை மற்றும்/அல்லது மதுவரி ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் ஏதேனும் நிபந்தனையினை இணங்கியொழுகத் தவறும் பட்சத்தில் அங்கீகாரம் இரத்துச் செய்யப்படுவதுடன் /அல்லது மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக தொழில்நுட்ப குற்ற அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதாகக் கொள்ளப்படும். அங்கீகாரத்திற்காக மாற்றல்கள் மதுவரி ஆணையாளர் நாயகத்தினால் மாத்திரமே மேற்கொள்ளப்பட முடியும்.

## *பகுதி II*

**மூன்றாண்டு அங்கீகாரக் கட்டணம்**

| இல. | உரிமத்தின் வகை | 3 நட்சத்திர மற்றும் 4 நட்சத்திர வகுப்பு ஹோட்டல்கள் (ரூபா மில்லியன்) | 5 நட்சத்திர மற்றும் மேற்பட்ட நட்சத்திர வகுப்பு ஹோட்டல்கள்/விற்பனைக்கூட ஹோட்டல்கள்/விற்பனைக்கூட வில்லாக்கள்/மரபுரிமை ஹோட்டல்கள் (ரூபா மில்லியன்) |
|---|---|---|---|
| 1. | 250 அல்லது அதிக அறைகள் | 3.0 | 5.0 |
| 2. | 200 அல்லது அதிக அறைகள் | 2.25 | 4.0 |
| 3. | 100 அல்லது அதிக அறைகள் | 1.75 | 3.0 |
| 4. | 50 அல்லது அதிக அறைகள் | 1.25 | 2.0 |
| 5. | 07 அல்லது அதிக அறைகள் | 0.75 | 1.0 |

## *பகுதி III*

**இலங்கை மதுவரி திணைக்களம்**

*இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையினால்அங்கீகரிக்கப்பட்ட ஹோட்டல்களுக்கு மதுவரி கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 52) 18 ஆம் பிரிவின் கீழ் ஏற்றுக்கொள்ளப்பட்ட தராதரத்திற்கு அமைவாகத் தயாரிக்கப்பட்ட வைன், பியர் மற்றும் மதுபானம் உள்ளடங்கிய அனைத்து திரவங்களையும் வளாகத்திற்குள் பரிமாறுவதற்காக விற்பனை செய்வதற்கான விசேட அங்கீகாரம்*

| | |
|---|---|
| 1. மாவட்டம் :................................................................................. | அங்கீகார இல. :.................................................. |
| வழங்கிய திகதி :..................................................................... | காலாவதியாகும் திகதி :....................................... |
| அறைகளின் எண்ணிக்கை :..................................................... | அங்கீகாரக் கட்டணம் :...................................... |
| ஹோட்டல் வகை :.................................................... | முத்திரைக் கட்டணம் :........................................... |

2. ஹோட்டல் பெயரும் முகவரியும் :

..................................................................................................................................................

..................................................................................................................................................

..................................................................................................................................................

3. மேலே 2 ஆம் கூட்டில் குறிப்பீடு செய்யப்பட்ட வளாகத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட தராதரத்திற்கு அமைவாகத் தயாரிக்கப்பட்ட வைன், பியர் மற்றும் மதுபானம் உள்ளடங்கிய அனைத்து திரவங்களையும் பரிமாறுவதற்கு, ........................................................ஆகிய நான், மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 18 ஆம் பிரிவின் கீழ் எனக்களிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் இத்தால் அங்கீகாரம் வழங்குகின்றேன்.

....................................................................
மதுவரி ஆணையாளர் நாயகம்.
திகதி :................................................................

*பிரதிகள் :*

1. இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை
2. உதவி மதுவரி ஆணையாளர் (......................................................................... மாகாணம்)
3. மதுவரி அத்தியட்சகர் (.................................................................)
4. மதுவரி நிலைய பொறுப்பதிகாரி (.............................................)

2- 387

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.